# உடுபத்தாவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, உடுபத்தாவ பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடுபத்தாவ பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக்கூற்றுக்களுடன் காண்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் முத்தரைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் முத்தரைக் கட்டணமாகக் கிடைத்த ரூபா 5,947,496 தொகையானது காசு அடிப்படையில் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெகோ இயந்திரத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக 2010 இன் இறுதிக் காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணமும் வட்டியுமாக ரூபா 305,783 தொகை 2010 திசெம்பர் 30 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் நானாவிதக் கடன்கொடுத்தோரின் கீழ் உரிய வட்டிப்பணமான ரூபா 49,918 தொகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கு அப்பொறுமானத்தினால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 இன் மூன்றாவது காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 21,019 மற்றும் நான்காவது காலாண்டிற்குரிய ரூபா 21,905 முத்திரை வரித்தொகையானது கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கமநெகும செயற்திட்டத்தின் 15 வேலைகளுக்குரிய கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்கில் ரூபா 2,760,469 குறைத்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

10 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,764,267 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,119,146 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பதவியினர் கடன் கணக்கில் விளக்கமளிக்கப்படாத ரூபா 772,636 மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா10,305,597 ஆக இருந்ததுடன் அதில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,252,119 தொகைக்குரிய 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,181,398 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 18,458,302 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 2,002,073 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 3,048,097 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

சபையின் பொது வங்கிக் கணக்கின் (028 – 100113254901) 2010 திசெம்பர் மாத வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதத்திற்கு மேற்பட்ட ரூபா 1,550,025 பெறுமதியான 101 காசோலைகள் காணப்பட்டதுடன் அதனுள் 2008 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எழுதப்பட்ட ரூபா 261,796 பெறுமதியான 10 காசோலைகளும் சேவையிலுள்ளவர்களின் பொறுப்பு நிதியத்திற்கு எழுதப்பட்ட ரூபா 34,215 பெறுமதியான 8 காசோலைகளும் ஓய்வூதிய நிதியத்திற்கு எழுதப்பட்ட ரூபா 443,677 பெறுமதியான 21 காசோலைகளும் காணப்பட்டன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள படியான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறைகள் மற்றும் வரிகள் | 768 | 680 | 426 | 766 | 725 | 305 |
| (ii) | வாடகை | 1,891 | 18,377 | 1,770 | 1,465 | 1,442 | 1,431 |
| (iii) | அனுமதிப்பத்தரக் கட்டணங்கள் | 692 | 678 | 201 | 63 | 17 | 442 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 32,477 | 30,280 | 2,668 | 32,715 | 30,671 | 7,315 |
| | மொத்தம் | 35,828 | 50,015 | 5,065 | 35,009 | 32,855 | 9,493 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிட்ட ரூபா 2,667,685 தொகையான தண்டப்பணம் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் எதுவும் இல்லாதிருந்ததாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் 2010 மார்ச் - திசெம்பர் வரை கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ஏடுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நிலுவை வருமானம்

சபையின் ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 1108 ஆதனவரியிறுப்பாளர்கள் இருந்ததுடன் அவர்களின் 533 சொத்துக்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 306,843 ஆகக் காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 17 சந்தர்ப்பங்களில் ரூபா 1,000 இற்கு மேற்பட்ட நிலுவைப் பணம் காணப்பட்ட இடங்களில் நிலுவை வரிகளின் கூட்டுத் தொகை ரூபா 38,970 ஆக இருந்ததுடன் அதன் நிலுவைக்

காலம் 6 – 16 வரையான காலாண்டிற்கிடைப்பட்டதாகக் காணப்பட்டது. நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 33 – 41 வரையிலான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 ஏக்கர் வரி

ஏக்கர் வரி பதிவேடுகளின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 368 ஏக்கர் வாரியிறுப்பாளர்கள் காணப்பட்டதுடன் அவர்களில் 281 பேர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 110,832 நிலுவையொன்று காணப்பட்டது. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 500 இற்கு மேற்பட்ட நிலுவைப் பணம் காணப்பட்ட இடங்களின் நிலுவை வரிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,197 ஆக இருந்ததுடன் அதன் நிலுவைக்காலம் 14 – 49 வரையிலான காலாண்டிற்கிடைப்பட்டதாகக் காணப்பட்டது. நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 45 ஆவது விதியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் விதிக் கோவை இலக்கம் 33 – 41 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 வியாபார அனுமதிப்பத்திரமும் வியாபார வரியும்

வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரியினையும் அறவிடுவது சம்பந்தமாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கொவையின் விதி இலக்கம் 59 இன் பிரகாரம் பகுதி ரீதியான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வியாபார மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடிய நிலையங்கள் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கு அவ்வாறான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிறுவகத்திற்கு பணத்தினைக் கட்டுதல் மற்றும் பகுதிகளில் பணத்தினை சேகரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 34 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 16,200 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானமொன்று பெறப்பட்டிருந்தது. பகுதிரீதியான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடிய நிலையங்கள் இணங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையொன்று வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக 1987 இன் 15

ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) இன் பிரகாரம் நிலுவைப் பண அறவீடு செய்யும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வியாபார வரி அறவிடக் கூடிய நிலையங்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் வரி அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| செலவின வகை | 2010 பாதீடு செய்யப் பட்டவை | 2010 உள்ள படியானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டவை | 2009 உள்ள படியானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| <u>மீண்டெழும் செலவு</u> | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| ஆளுக்கான வேதனம் | 17,954 | 17,473 | 481 | 18,203 | 16,720 | 1,483 |
| ஏனையவைகள் | 11,217 | 14,002 | (2,785) | 9,174 | 13,087 | (3,913) |
| உப மொத்தம் | 29,171 | 31,475 | (2,304) | 27,377 | 29,807 | (2,430) |
| மூலதனச் செலவு | 10,175 | 6,507 | 3,668 | 26,626 | 8,138 | 18,488 |
| முழு மொத்தம் | 39,346 | 37,982 | 1,364 | 54,003 | 37,945 | 16,058 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **புதவியினர் தரங்கள்** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 02 | 02 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 26 | 22 |
| ஆரம்ப தரங்கள் | 44 | 36 |
| ஏனைய(நாளாந்த, தற்காலிக) | -- | 18 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியாக வருமானக் கடன்பட்டோர் ரூபா 4,977,220 மற்றும் ரூபா 51,717 முற்கொடுப்பனவுகளுமாக ரூபா 5,028,937 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கும் மேலாக அறவிட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,667 ஆக இருந்தது.

### 2.6.3 அசையாத நடைமுறைச் சொத்துக்கள்

இலங்கை வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,464 தொகையான செயற்பாடற்ற நடைமுறைக் கணக்கு காசு மீதியொன்று காணப்பட்டது.

## 2.7 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 7,625,000 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் 43 செயற்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதியினைப் பெறுவதிலுள்ள வசதியீனங்களின் அடிப்படையில் அதன் கீழ் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 3,320,000 இலான 17 செயற்திட்டங்கள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதியப் பாய்ச்சலானது சபையின் நிதியமாக ஈடுபடுத்தி ரூபா 450,000 பெறுமதியான 5 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சபையின் ஏற்பாடுகள் நிலுவையானமையால் அச் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருமானக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்